# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2093/4 – 2018 ඔක්තෝබර් මස 15 වැනි සඳුදා – 2018.10.15

*2093/4 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாண மாகாண சபை**

*ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 இலக்க ஊவா மாகாண பிரிவெனா கல்வி நிதிய நியதிச் சட்டத்தை அனுமதித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2018.07.12 ஆந் திகதி சம்மதிக்கப்பட்ட 2018.09.19 ஆந் திகதி ஊவா மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனமதிக்கப்பட்ட பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரது கவனத்திற்காகவும் இத்தால் வெளியிடுகின்றேன்.*

*ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க,*
*செயலாளர்,*
*ஊவா மாகாணத்தின் மாகாண சபை.*

*ஊவா மாகாண மாகாண சபைச் செயலாளர் அலுவலகம்,*
*இராஜ வீதி, பதுளை,*
*2018, ஒற்றோபர் 04.*

**ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊவா மாகாண பிரிவெனா கல்வி நிதியச் சட்டம்**

*ஊவா மாகாணத்தில் பிரிவனா கல்வியில் ஈடுபட்டுள்ள பௌத்த பிக்குமார்களின் மற்றும் தசசில் அன்னையரின் கல்வி தேவைகளுக்காக உதவி வழங்கவும் அத்துடன் தொடர்புபட்ட விடயங்களுக்கான ஏற்பாடுகளை பெற்று கொடுப்பதற்காகவும் 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊவா மாகாண பௌத்த விவகாரம் தொடர்பான அபிவிருத்தி சபை (இணைத்தல்) நியதிச் சட்டத்தை சட்ட நீக்கம் செய்யும் நியதிச்சட்டம்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு அமுல்படுத்தப்படுகிறது.*

1A - PG4288 - 12 (2018/10)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

சுருக்கப் பெயர் மற்றும் நடை முறைபடுத்தப் படும் திகதி.

1. இந் நியதிச் சட்டத்தை ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊவா மாகாண பிரிவெனா கல்வி நிதிய நிதியச் சட்டம் என அழைக்கப்படுவதுடன் ஊவா மாகாண கௌரவ ஆளுநர் மூலம் அனுமதி அளிக்கப்படும் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

ஊவா மாகாண பிரிவெனா கல்வி நிதியம் உரு வாக்குதல்.

2. (1) (இதன் பின்னர் "நிதியம்" என்று அழைக்கப்படும்) "ஊவா மாகாண பிரிவனா கல்வி நிதியம்" என்று அழைக்கப்படும் நிதியம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

(2) நிதியம் (1) ஆவது உப பிரிவில் அதற்கு கொடுக்கப்பட்டுள்ள பெயரில் கூட்டுத்தாபனம் ஆவதுடன், அதற்கு தொடர்ச்சியான இருப்பு மற்றும் பொதுவான முத்திரை ஒன்று இருக்க வேண்டும். மேலும் அந்த பெயரில் நிதியத்தினால் வழக்கு தொடரவும் நிதியத்திற்கு எதிராக வழக்க தொடரவும் இயலும்.

நிதியத்தின் நிருவாக சபை.

3. (1) நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு இதன் பின்னர் ஏற்படுத்தப்பட்டுள்ள "நிருவாக சபையிடம்" வழங்கப்பட வேண்டும்.

(2) (இதன் பின்னர் "சபை" என்று அழைக்கப்படும்) நிதியத்தின் நிருவாக சபை கீழ்க் காட்டப்பட்டுள்ள அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் :-

(அ) ஊவா மாகாண அமைச்சரவையின் பிரதான அமைச்சர்;
(ஆ) ஊவா மாகாண பிரதான அமைச்சரினால் நியமிக்கப்படும் பதுளை மற்றும் மொனராகலை மாவட்ட தலைமை விகாராதிபதி பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்ற பிக்குமார் இருவர்;
(இ) ஊவா மாகாண பிரதான அமைச்சரினால் நியமிக்கப்படும் ஆளும் கட்சி மாகாண சபை பிரதிநிதி ஒருவர்;
(ஈ) ஊவா மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்;
(உ) ஊவா மாகாண பிரதான அமைச்சரின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்;
(ஊ) கலாசார விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்;
(எ) ஊவா மாகாண கல்வி திணைக்களத்தின் பிரிவெனா கல்விக்கு பொறுப்பான பணிப்பாளர்கள் இருவர்.

(3) ஊவா மாகாண பிரதான அமைச்சர் சபையின் தலைவராக இருக்க வேண்டும்.

(4) இந்த நிதியச்சட்டத்தில் பிரதான அமைச்சரின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் சபையின் செயலாளராக இருக்க வேண்டும். செயலாளர் சபையின் பிரதான கணக்கீட்டு அதிகாரியாகவும் இருக்க வேண்டும்.

(5) சபையில் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் மூலம் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதம் ஊடாக ஒரு மாத கால அவகாசத்தில் தாமாக பதவியிலிருந்து விலகிக் கொள்ள முடியும்.

(6) ஒரு நபர் :

(அ) இலங்கை அல்லது வேறு நாடுகளில் செயற்படும் சட்டத்தின் கீழ் சொத்திழந்தவராக அல்லது வங்குரோத்து நிலையை அடைந்தவராக அறிவிக்கப்பட்டு விடுவிக்க முடியாத வங்குரோத்து நிலையை அடைந்த ஒருவராக இருந்தால்;
(ஆ) நல்லெழுக்கத்திற்கு எதிரான நெறி பிறழ்வுகளுக்கு சிறை தண்டனை வழங்கப்பட கூடிய குற்றங்களை புரிந்தவராக இருந்தால்;
(இ) இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் புத்தி சுவாதினமற்ற அல்லது மனநலம் குறைந்தவராக இருந்தால்.

அவ்வாறான ஒருவர் சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினராக தொடர்ந்து செயற்படுவதற்கும் தகுதியற்றவராக கருதப்பட வேண்டும்.

(7) (5) மற்றும் (6) ஆவது பந்திகளில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஒருவரின் பதவிக் காலம் மூன்று வருடங்களாகும்.

(8) தலைவர், செயலாளர் மற்றும் சபையின் மற்ற மூன்று (03) உறுப்பினர்கள் தலைவரினால் எந் நேரத்திலும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை எழுத்து மூலம் காரணம் காட்டி பதவியிலிருந்து விலக்க முடியும். ஏற்பட்ட வெற்றிடத்திற்கு புதிய பிரதிநிதி ஒருவரை நியமிப்பது 3 (2) ஆவது உப பிரிவுக்கு ஏற்ப இடம் பெற வேண்டும்.

(9) சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஒருவர் மரணமடைந்தால் பதவியிலிருந்து விலகினால் அல்லது பதவிக் காலம் முடிவுறும் முன்பாக வேறு காரணங்களுக்காக தனது பதவியை வெற்றிடமாக்கும் சந்தர்ப்பங்களில் உறுப்பினருக்கு பதிலாக நியமிக்கப்பட்டவர் முன்பு பதவியிலிருந்தவரின் முடிவுறாத காலம் வரை பதவியில் இருக்க முடியும்.

(10) சபையின் உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை முடிவு பின்பற்ற அதிகாரம் உள்ளதாக கருதப்பட வேண்டும்.

(11) சபையின் உறுப்பினர்களுக்கிடையே வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள காரணங்களுக்காக மாத்திரமே சபையின் எந்தவொரு செயற்பாடு மற்றும் வேலை அதிகாரமற்றதாக கருதப்பட கூடாது.

(12) சபையின் ஒரு கூட்டத்திற்கான குறை நிறைவெண் ஐந்து (5) உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

(13) சபையின் கூட்டங்கள் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அல்லது விசேட சந்தர்ப்பங்களில் தலைவரின் கட்டளைகளுக்கு அமைவாக இடம்பெற வேண்டும்.

4. ஊவா மாகாணத்தில் பௌத்த பிக்குமார்களின் மற்றும் தசசில் அன்னையரின் பிரிவெனா மற்றும் பிரிவெனா கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் கல்வி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்ய அவசியமான உதவிகளை வழங்குவது நிதியத்தின் நோக்கமாகும். நிதியத்தின் குறிக்கோள்கள்.

5. நிதியத்தின் முத்திரை : நிதியத்தின் முத்திரை.

(அ) சபையினால் காலத்துக்கு காலம் தீர்மானிக்கப்படும் ஒரு நபரின் பாதுகாப்பில் இருக்க வேண்டும்.

(ஆ) சபையினால் முடிவு செய்யப்படும் ஏதாவது ஒரு வகையில் மாற்றி அமைக்கலாம்.

(இ) சபையின் அதிகாரத்தடன் சபை உறுப்பினர்கள் இருவர் முன்னிலையில் தவிர வேறு யாரும் ஆவணத்தில் கையெழுத்திட கூடாது மற்றும் அவ்விருவரும் தாங்கள் வருகை தந்தமைக்கு சாட்சியாக அந்த ஆவணத்தில் கையெழுத்திட வேண்டும்.

6. (1) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக தேவையான அல்லது தொடர்புடைய எல்லாவற்றையும் நிதியத்தின் பெயரில் செய்வதற்கு சபைக்கு அதிகாரமுள்ளது. நிதியத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்.

(2) (1) ஆவது உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இழப்பு ஏற்படாத வகையில் சபைக்கு கீழ் குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகள் இருக்க வேண்டும்.

(அ) நிதி சேகரித்தல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆதாரங்களின் மூலம் பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகளை பெற்றுக் கொள்ளல்;

(ஆ) இந்த நிதியச்சட்டத்தின் கீழ் அல்லது விலை கொடுத்து வாங்குதல் அன்பளிப்பு பரிசுகள் மதிப்பீட்டு ஒழுங்கு முறை மூலம் அல்லது வேறு வழிகளில் சபைக்கு ஒப்படைக்கப்படும் அசையும் அல்லது அசையா சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ள மற்றும் வைத்திருக்க நிதியத்திற்கு அதிகாரம் இருப்பதுடன் அவற்றை விற்க அடகு வைக்க வாடகைக்கு விட அன்பளிப்பு செய்ய ஒப்படைக்க விட்டு கொடுக்க மாற்றிக் கொள்ள அல்லது வேறு வழிகளில் அகற்றுதல்;

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை கொண்டு செல்வதற்காக அதன் அதிகாரங்கள் பணிகள் மற்றும் கடமைகளை செயற்படுத்த மற்றும் நிறைவேற்ற தேவையான அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகளுக்க நேராக அல்லது சபியின் மூலம் தற்காலிகமாக எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் இல்லாத சமயத்தில் உப பிரதிநிதிகள் ஊடாக சென்று செயற்படுதல்;

(ஈ) 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊவா மாகாண பௌத்த விவகாரம் தொடர்பான அபிவிருத்தி சபை (இணைத்தல்) நிதியச்சட்ட நிதியத்தின் கீழுள்ள நிதி உள்ளடங்களான நிதியத்திற்கு சொந்தமான நிதியை, சபையின் விருப்பத்துடன் முதலீடு செய்வதற்காக சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு முதலீட்டில் முதலீடு செய்தல் மீள் முதலீடு செய்தல் அந்த முதலீட்டை மாற்றுதல் சபையின் விருப்பத்திற்கேற்ப இரத்து செய்தல் மற்றும் இந்த முதலீடுகள் மூலம் திரள்கின்ற வருமானங்களை சேரித்தல்; மற்றும்

(எ) சபையின் மூலம் அறிவிக்கப்படும் வங்கி அல்லது வங்கிகளில் நிதியத்தின் பெயரில் வங்கி கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் மூடி விடுதல்

நிதியத்தின் அமைப்பு.

7. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆதரங்களின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டும்:-

(அ) நிதியத்திற்காக ஊவா மாகாண சபையினால் வழங்கப்படும் உதவிகள்;

(ஆ) தனிநபர் அல்லது அமைப்பு மூலம் வழங்கப்படும் நிதி அல்லது வேறு உதவிகள் அல்லது அன்பளிப்புகள்;

(இ) நிதி முதலீடுகள் மூலம் கிடைக்கப்பெறும் வட்டி அல்லது இலாபம்;

(ஈ) வெளிநாட்டு ஆதாரங்கள் மூலம் கிடைக்கப்பெறும் உதவிகள் அன்பளிப்புகள் அல்லது நன்கொடைகள்;

(எ) வேறு வழிகளில் நிதியத்திற்கு கிடைக்கப்பெறும் வரவுகள்;

(ஏ) 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊவா மாகாண பௌத்த விவகாரம் தொடர்பான அபிவிருத்தி சபை (இணைத்தல்) நிதியச்சட்ட நிதியத்தின் நிதியை ஒன்றிணைப்பதன் மூலம்.

நிதியத்தினால் செய்யப்படும் கொடுப்பனவுகள்.

8. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள செலவுகள் நிதியத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் :

(அ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான பணிகளுக்கு தேவையான நிதியத்தின் மூலம் அனுமதி அளிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகள்;

(ஆ) நிதியத்தை தோற்றுவித்து நடத்தி செல்ல மற்றும் செயற்படுத்த தேவையான செலவுகள்;

கணக்கு மற்றும் கணக்காய்வு.

9. (1) சபையினால் அதன் வரவுகள் செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் நிதியத்தின் வேறு கொடுக்கல் வாங்கல்கள் கணக்கியல் தரங்களுக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டு கொண்டு செல்லப்பட வேண்டும்.

(2) சபையின் மூலம் ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியின் போது கணக்கு புத்தங்களின் மிகுதி கணக்கிடப்படுவதற்கு தயார்படுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன் அடுத்த வருடம் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்பதாக உரிய வருடத்திற்கான வரவு செலவு கணக்கு மற்றும் முன்னர் குறிப்பிட்ட திகதிக்கு தயாரிக்கப்பட்ட வேண்டிய நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கண்ணோட்டம் மற்றும் மிகுதி அறிக்கை அடங்கிய இறுதி கணக்கொன்றை தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(3) (2) ஆவது பந்திகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக விடய பொறுப்பான அமைச்சின் கணக்காளர் உதவியை பெற்றுக் கொள்ள முடியும்.

(4) அரசியல் அமைப்பின் 154 ஆவது சட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு வருடமும் நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

10. நிதியத்தின் நிதி ஆண்டு நாட்கட்டி ஆண்டாக வேண்டும். *நிதியத்தின் நிதி ஆண்டு.*

11. நீதி மன்றத்தின் முன்னால் நிதியத்தினால் அல்லது நிதியத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்ககுகள் தொடர்பாக செலவுகள் ஏற்படுமாயின் அச் செலவுகள் நிதியத்தினால் வழங்கப்பட வேண்டும். *செலவுகளை ஈடு செய்தல்.*

12. (1) இந்த நிதியச் சட்டத்தின் அங்கீகாரம் பெற்ற அல்லது தேவையான அனைத்து விடயங்களுடனும் அல்லது இந்த நிதியச் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பேரில் பிரதான அமைச்சர் விதிகள் அல்லது ஒழுங்கு முறைகளை உருவாக்கலாம்.

(2) பிரதான அமைச்சரினால் உருவாக்கப்படும் அனைத்து விதிகள் அல்லது உத்தரவுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி முதல் அல்லது அந்த உத்தரவுகள் குறிப்பாக தெரிவிக்கப்பட கூடிய ஏதாவது ஒரு பின் திகதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(3) பிரதான அமைச்சரினால் முன் வைக்கப்படும் எந்த ஒரு விதி அல்லது ஒழுங்கு முறையும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உடன் இயன்றளவு விரைவாக மாகாண சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். மாகாண சபையினால் அனுமதியளிக்கப்படாத ஏதாவது ஒரு உத்தரவு அனுமதி மறுக்கப்பட்ட திகதியில் இருந்து அந்த விதி அல்லது உத்தரவின் கீழ் முன்னர் செய்யப்பட்ட செயற்பாட்டிற்கு பங்கம் ஏற்படாத வகையில் சட்ட நீக்கம் செய்யப்பட்டதாக கருதப்படல் வேண்டும்.

(4) ஒரு விதி அல்லது உத்தரவு சட்ட நீக்கம் செய்யப்பட்டதாக கருதப்படும் திகதி தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்.

(5) நிதியச்சட்டத்தின் உப பிரிவு (1) இன் கீழ் பிரதான அமைச்சரினால் உருவாக்கப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்கு முறைகள் இந்த நிதியச்சட்டத்தின் மூலம் அமுலாக்கப்பட வேண்டும்.

13. நிதியத்தின் அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் குற்றவியல் சட்டக் கோவையின் அர்த்தங்களுக்கமைய மற்றும் அதன் செயற்பாடுகளுக்காக அரச ஊழியர்களாக கருதப்பட வேண்டும். *நிதியத்தின் அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் குற்றவியல் சட்டக் கோவையின் அர்த்தங்களுக்கமைய அரச ஊழியர்களாக கருதப்பட வேண்டும்.*

14. நிதியம் இலஞ்ச ஊழல் சட்டத்தின் அர்ததங்களுக்கு அமைய அட்டவணை இடப்பட்ட நிறுவனமாக கருதப்படுவதுடன் அச்சடத்தின் ஏற்பாடுகள் அதற்கமைவாக பிரயோகித்துக் கொள்ளப்பட வேண்டும். *நிதியம் இலஞ்ச ஊழல் சட்டத்தின் அர்த்தங்களுக்கு அமைய அட்டவணை இடப்பட்ட நிறுவனமாக கருதப்பட வேண்டும்.*

15. இந்த நிதியச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியில் இருந்து 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊா மாகாண பௌத்த விவகாரம் தொடர்பான அபிவிருத்தி சபை (இணைத்தல்) நிதிய நிதியச் சட்டம் சட்ட நீக்கம் செய்யப்படுவதுடன், இதுவரை 1993 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க நிதியச்சட்டம் மூலம் செய்யப்பட்ட அனைத்து செயற்பாடுகளுக்கும் பங்கம் ஏற்படாது மற்றும் அவை இந்த நிதியச்சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

16. இந்த நிதியச்சட்டத்தின் சிங்கள ஆங்கில மற்றும் தமிழ் மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படும் போது சிங்கள மொழி சொற்றொடர்கள் செயல்படுத்தப்பட வேண்டும். *முரண்பாடுகள் ஏற்படும் போது சிங்கள மொழி சொற்றொடர்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.*

பொருள் விளக்கம்.

17. சொற்றொடர்க்ள தொடர்பாக பொருள் விளக்கம் தேவைப்படும் பட்சத்தில் இந்த நிதியச்சட்டத்தில் :

*"பிரதான அமைச்சர்" என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண சபையின் பிரதான அமைச்சர்;*

"பிரதான அமைச்சரின் விடய பொறுப்பான அமைச்சு செயலாளர்" என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண பிரதான அமைச்சரின் விடய பொறுப்பான அமைச்சு செயலாளர் ;

*"எதிர்கட்சி தலைவர்" என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண சபையின் எதிர்கட்சி தலைவர்;*

*"பிக்குகள்" என குறிப்பிடப்படுவது ஊவா மாகாண பிரிவின் கல்வியில் ஈடுபட்டுள்ள உபசம்பதா அல்லது சாமனேர பிக்குகள்.*

*11-15*